புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புகள்	ஆகக்கூடிய புள்ளிகள்	புள்ளிகள் வழங்கப்படும் முறை	புள்ளிகள்
மேலதிக தொழிற் தகைமைகள்	35	ஒவ்வொரு துறையிலும் எதிர்பார்க்கும் தகைமையில் NVQ 3 அல்லது அதற்கு மேலதிக தகைமைகளுக்கு 25 புள்ளிகள் உரித்தாகும்.	25 புள்ளிகள்
		ஏனைய துறைகளில் NVQ 3 அல்லது அதற்கு அதிகமான தகைமைகளுக்காக 10 புள்ளிகள் உரித்தாகும்.	10 புள்ளிகள்
மேலதிக அனுபவம்	45	அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க/ தனிப்பட்ட பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் உரிய துறையில் அனுபவத்தை ஆகக்கூடியது 05 வருடங்கள் வரை ஒரு வருடத்திற்கு 09 பள்ளிகள் உரித்தாகும்.	45 புள்ளிகள்
நேர்முகப் பரீட்சையில் காண்பிக்கப்படும் திறமைகளின் தலைமைத்துவம், எண்ணங்கள், ஆளுமை மற்றும் தொடர்பாடல் திறமைக்காக வழங்கப்படும் புள்ளிகள்	05	நேர்முகப் பரீட்சையில் காட்டப்படும் திறமையின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.	05 புள்ளிகள்
மொத்தம்	100		

குறிப்பு .- பதவிக்குரிய அனுபவங்களை ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ் மூலம் சான்றுப்படுத்தல் வேண்டும். அத்தகைமைகள் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

தொழில்சார் செயன்முறை பரீட்சை

விடயப் பரப்பு	காலம்	மொத்த புள்ளி	சித்தியடையும் புள்ளி
விடய அறிவு	03 மணித்தியாலங்கள்	100	40

அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம் ஆரம்ப மட்டப் பகுதியளவிலான தொழில்நுட்ப சேவை வகுதியின் (திறந்த) ஆட்சேர்ப்பிற்கான தொழில்சார் செயன்முறை தகைமைகள்

பதவிப் பெயர்	விடயப்பரப்பு
அலுமினியம் தயாரிப்பு உதவியாளர்	செயன்முறை பரீட்சையில் பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும். * பொருட் கண்காட்சிக்கான அலுமாரியைத் தயாரித்தல். * குளியலறைக்கான மறைப்புகளைத் தயாரித்தல் மற்றும் பொருத்துதல். * கூரைக்கான சிவிலின் தயாரித்து பொருத்துதல்.
கட்டுமானத் தொழில் (கொத்தனார்) உதவியாளர்	செயன்முறை பரீட்சைக்காக பின்வரும் இரண்டு விடயத் துறைகளில் சித்தியடைதல் வேண்டும். * கற்சுவர் கட்டுமான வேலைகள் (றபல் கட்டுமானம்) * செங்கல்/பிளக் கல் கட்டுமான வேலைகள் * ஈரமான மேற்பரப்பினை அமைத்தல் * மட்டமான மேற்பரப்பு வேலைகளைச் செய்தல்